இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

விஞ்ஞானமாணி/கல்விமாணிப் பட்டப் பாடநெறி

பிரயோக கணிதம் – மட்டம் 03

**ADU3302 – வகையீட்டுச் சமன்பாடுகள்**

மூடிய புத்தகப் பரீட்சை (NBT) - 2024/2025

காலம்: ஒரு மணித்தியாலம்

திகதி: 16.03.2025 நேரம்: பிப 04.00 – பிப 05.00

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக.

1. $\frac{dy}{dx} + \frac{1}{2}y = \frac{1}{2}y^3$ என்னும் வகையீட்டுச் சமன்பாட்டைக் கருதுக.

   (i) ஒரு பொருத்தமான பிரதியீட்டைப் பயன்படுத்தி மேலுள்ள வகையீட்டுச் சமன்பாட்டை
   $$\frac{dz}{dx} + P(x)z = Q(x)$$
   என்னும் வடிவத்திற்கு மாற்றுக.

   (ii) தொகையீட்டுக் காரணி முறையைப் பயன்படுத்தி, மேலே (i) இல் கண்டறியப்பட்ட வகையீட்டுச் சமன்பாட்டைத் தீர்க்க மற்றும் இதிலிருந்து $x$ இன் சார்பில் $y$ ஐக் காண்க.

   (iii) $y(0) = \frac{1}{2}$ எனின், முதலில் தரப்பட்ட வகையீட்டுச் சமன்பாட்டின் தீர்வைக் காண்க.

2. ஒரு கோப்பை சூடான தேநீர், ஒரு மாறா சுற்றுப்புற வெப்பநிலை $T_0$ உடன் ஒரு அறையில் குளிர்வதற்கு விடப்படுகிறது. நியூட்டனின் குளிர்ச்சி விதிப்படி, தேநீரின் வெப்பநிலை குறையும் வீதம் அதன் வெப்பநிலைக்கும் மற்றும் அறை வெப்பநிலைற்கும் இடையிலுள்ள வித்தியாசத்திற்கு விகிதாசாரமாகும்.

   (i) கோப்பையில் உள்ள தேநீர் குளிர்வதற்கு இந்த விதியைப் பின்பற்றுகிறது எனக் கொள்க, $T, T_0, t$ மற்றும் ஒரு விகிதாசார மாறிலி $k$ இன் சார்பில் வகையீட்டுச் சமன்பாட்டை எழுதுக.

   (ii) $t$ நேரத்தில் தேநீரின் வெப்பநிலை $T = T_0 + Ae^{-kt}$ இனால் தரப்படுகிறது எனக் காட்டுக, இங்கு $A$ ஒரு மாறிலி ஆகும்.

   (iii) தேநீரின் ஆரம்ப வெப்பநிலை $80^0C$ ஆகவும் மற்றும் 10 நிமிடங்களுக்கு பிறகு அது $60^0C$ இற்கு குளிர்ச்சியடைகிறது எனவும், அதே நேரத்தில் அறை வெப்பநிலை $20^0C$ ஆகவும் இருக்கிறது என தரப்படுகிறது. நியூட்டனின் குளிர்ச்சி விதியில் விகிதாசாரா மாறிலி $k$ இன் பெறுமதியைக் காண்க.

******